# இலங்கையில் தற்கொலை தடுப்பு : பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான ஆதரவு

டாக். துலீகா நைப், பேராசிரியர்.க்றிஸ் மெட்காப், பேராசிரியர்.ஹெலன் லம்பர்ட், பேராசிரியர்.டேவிட் கன்னெல் (ப்ரிஸ்டல் பல்கலைக்கழகம்) டாக்.ஷாலுக ஜயமன்ன(களனி பல்கலைக்கழகம்), டாக். திலினி ராஜபக்ஷ(பேராதனை பல்கலைக்கழகம்), திருமதி. ஜிசெல் தாஸ் ( தீம் நிருவணம்)



கடந்த 20 வருடங்களில் தற்கொலை விகிதத்தை குறைப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆயினும், உயர் வருமானமுடைய நாடுகளுடன் பார்க்கும் போது இளைஞர் மத்தியில் தற்கொலை விகிதம் இப்போதும் இரு மடங்காகவே காணப்படுகிறது இலங்கையில் தற்கொலை விகிதத்தை குறைப்பதற்கு ஓர் குறுக்குத்துறை அணுகுமுறை *(cross-sectoral approach)* அவசர தேவையாக அமைந்துள்ளது.

## பின்னனி *(Background)*

*1990* ம் ஆண்டளவில் இலங்கை உலகில் அதிகமான தற்கொலை விகிதத்தை கொண்ட நாடுகளில் ஒன்றாக இருந்தது. கடந்த *20* ஆண்டுகளாக மிகவும் நச்சுத்தன்மையான பூச்சுக்கொல்லியை ( சமீபமான ஆண்டுகளில் மிகவும் பொதுவான தற்கொலை முறை) அகற்றுவதன் மூலம் தற்கொலை விகிதத்தை குறைப்பதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளது. எவ்வாறாயினும் *15* முதல் *29* வயதைச் சேர்ந்தவர்களின் உயிரிழப்பிற்கு தற்கொலையானது இன்னும் ஓர் முக்கியமான காரணமாக அமைந்துள்ளது.. கூடுதலான தற்கொலைச் சம்பவங்கள் கிராமத்துப்புரங்களில் நடைபெறுவதுடன் இளம் பெண்களிடையிலும் முதுமையான ஆண்களிடையிலும் அதிகமான விகிதம் காணப்படுகிறது.

தற்கொலையில் சமூக காரணிகள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. ஆயினும் இதில் அவற்றின் பங்கு தெளிவுபடுத்தப்படவில்லை. தற்கொலைத் தடுப்பு முயற்சிகழுக்கு அறிவிப்பதற்காக ஓர் நல்ல புரிந்துணர்வு தேவை. தற்கொலை விகிதத்தைக் குறைப்பது *UN SDG* யின் *(Sustainable Development Goal-* நிலயான வளர்ச்சி இலக்கு*)* குறிக்காடி மற்றும் *WHO* மணநல நடவடிக்கைத் திட்டத்தின் ஓர் இலக்கு ஆகும்

இந்த ஆராய்ச்சி, வடமத்திய மாகாணத்தில் உள்ள ஓர் பெரிய கிராமப்புர மக்கள் சனத்தொகையிள் வறுமை மற்றும் தற்கொலை முயற்ச்சிக்கான அபாயம் போன்ற சமூகக் காரணிகளிடையே உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்துள்ளது. *54,000* குடும்பங்களில் *150,000* பேரிடம் எடுக்கப்பட்ட கதவு தட்டல் கணக்கெடுப்புடன், மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தற்கொலை முயற்ச்சிகள் பற்றிய தகவல்களும் இணைக்கப்பட்டது. அப்பகுதியிலிருந்த அனைத்து தகுதிப்பெற்ற குடும்பங்களும் அணுகப்பட்டன, அதில் *95%* கணக்கெடுப்பிற்கு பதிலளித்தனர்.

இந்த பகுப்பாய்வு கண்டுபிடுப்புகள் பாதிக்கப்படக்கூடிய நான்கு மக்கள் தொகைகளை கண்டறிந்துள்ளது. *1)* விவசாயிகள் *2)* தினசரி கூலித்தொழிலாளிகள் *3)* பெண் தலைமை வகிக்கும் குடும்பங்கள் *4)* வெளிநாடு சென்றுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்கள்.

இக் கொள்கையறிக்கை பங்குதாரர் பட்டறைகளில் பரிந்துறைக்கப்பட்ட முன்முயற்ச்சிகளை வழங்குகிறது. தவறான மதுபாவனையை குறைப்பது முதல் உறவுகள் மற்றும் தொழில்த்துறை திறன்களை மேம்படுத்துதல், அத்துடன் மேம்பட்ட மனநல சேவை வழங்கள் மற்றும் விழிப்புணர்வு பற்றி இங்கு உத்திகள் பரிந்துறைக்கப்பட்டுள்ளன.

## ஆராய்ச்சி சுருக்கம் *(Research Summary)*

வடமத்திய மாகாணத்தில் ராஜாங்க, தம்புட்டேகம, நொச்சியாகம, தளாவ, கல்னேவ, இப்லோகம போன்ற இடங்களில் *54,000* குடும்பங்களிலிருந்து பெறப்பட்ட கணக்கீட்டு மற்றும் மருத்துவமனைத் தரவுகளையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அதன் மூலம் தற்கொலை முயற்ச்சிக்காண அதிக அபாயங்களைக் கொண்ட, பாதிக்கப்படக்கூடிய நான்கு மக்கட்தொகுதிகளை கண்டறிந்தோம். அபாயங்கள் விவசாயிகளிடம் இரு மடங்காக காணப்பட்டதுடன் தினசரி கூலித்தொழிலாளிகளிடமும், பெண் தலைமை வகிக்கும் குடும்பங்களிலும், வெளிநாடு சென்றுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களிலும் கணிசமான உயர்வைக் காட்டுகிறது.

கணக்கீட்டு பகுப்பாய்வைத் தொடர்ந்து, நாம் இந்த கண்டுபிடிப்புக்களை பகிர்ந்து கொள்வதற்காக 100 பங்கேற்பாளர்களைக் கொண்ட , பங்குதாரர்களுக்கான 10 பட்டறைகளை நடத்தினோம். நாம் இதற்காக ஆசிரியர்கள், சமூக சேவகர்கள், கிராம சேவகர்கள், வெளிநாட்டு குடியேற்றல் அதிகாரிகள், சமூகத்தலைவர்கள்/ உருப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் ( சுகாதார அமைச்சு, கல்வி, சமூகம் மற்றும் நலன்புரி) அரசு அல்லாத நிறுவணங்கள், ஆராய்ச்சியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் போன்று வெவ்வேறு துறைகளைச்சேர்ந்த பங்குதாரர்களை ஈடுபடுத்தினோம். முதலில் தற்கொலை அபாயங்களைக் கொண்ட நான்கு மக்கட்தொகுதிகளைப் பற்றிய கண்டுபிடிப்புகள் பங்குதாரர்களுக்கு முன்வைக்கப்பட்டது. ஒவ்வொரு துணைப்பிரிவிலும் அதிக ஆபத்திற்கு பங்களித்திருக்கக் கூடிய விடயங்கள் என்னவென்று பங்கேற்பாளர்கள் கேட்கப்பட்டனர். மனிதர்க்கிடையேயான மோதல்கள் தற்கொலைக்கான ஓர் முக்கிய காரணியாக கூறப்பட்டது.

சமூக பங்குதாரர்களால் அடையாளம் காணப்பட்டு பட்டியல் படுத்தப்பட்ட பிரச்சினைகள் , பங்கேற்பாளர்களுக்கு சாத்தியமான தீர்வுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது.

ஆராய்ச்சியில் அடங்கிய துணை குழுக்களில் உள்ளவர்கள் அனைவரும் (சில கட்டங்களில்) ஒருவருக்கொருவர் இணைக்கப்பட்டுள்ளனர் என்று பங்குதாரர்கள் கருத்து தெரிவித்தனர். (உ.தா: பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும், வெளிநாடு சென்ற பெண்கள் ஓர் தினசரி கூலி தொழிலாளியை மணம் முடித்திருக்க வாய்ப்புகள் உண்டு )அத்துடன் ஒரு குழுவினாள் முகம் கொடுக்கப்படும் பிரச்சினைகள் மற்றைய குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் பொதுவான அனுபவமாக இருந்தது. மேலும் அடையாளம் காணப்பட்ட காரணிகல் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருந்தது.

அடையாளம் காணப்பட்ட சிக்கல்களின் அடிப்படையில் (பின் பக்கம் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்), பங்குதாரர்கள் பரந்த அளவிலான சாத்தியமான தலையீடுகளை பரிந்துரைத்தனர். கடினமான சூழ்நிலைகளை கையாழுவதற்கு ஒரு வழிமுறையாக தற்கொலை செய்துகொள்வதும் (ஒரு 'தீர்வு' பொதுவாக உள்ளூர் ஊடகங்களில் சித்தரிக்கப்படுகிறது)

பிரச்சினைகளை சமாளிக்கும் திறன் இன்மையும் இந்த மக்களிடையே தற்கொலை முயற்ச்சிகளுக்கான ஆபத்தை அதிகரித்துள்ளது என பங்குதாரர்கள் கருதினார்கள். தேசிய / அரசாங்க சேவகர்களுடன் செய்யப்பட்ட பட்டறையிலும் ஒழுங்குமுறையான சேவை வழங்குதலின் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தப்பட்டது

சில பரிந்துரைகள் அனைத்து குழுக்களுக்கும் பொதுவான நன்மைகளை வழங்குவதோடு, மற்றைய சில குறிப்பிட்ட துணைக் குழுக்களுக்கே நன்மையளிக்கும்.

---

## உலகளாவிய பரிந்துரைகள்

### வயது வந்தோர் மற்றும் பிள்ளைகளுக்கான கல்வி ஆதரவு

- பாடசாலைகள் மற்றும் சமூக அமைப்புகள் முறன்பாடுகழுக்கு தீர்வு காணும் திறமைகளுக்கான பயிற்சி திட்டங்கள் வழங்க வேண்டும்.
- சமூக வலுவூட்டல் அமைச்சு, நலன்புரி மற்றும் கண்டி மரபு அமைச்சு ஆகியவை ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவித்தொகை/ மானியங்கள் வழங்குவதை அதிகரிக்க வேண்டும்.
- பிரதேச செயலகங்கள் அடிப்படை வரவு செலவு திட்டதைப்பற்றி வயது வந்தோருக்கான ஓர் கல்வி திட்டத்தை வழங்க வேண்டும்.. பாடசாலைகளும் வரவு செலவு திட்டம் அமைக்கும் திறன்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
- சுயதொழில் வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்க்காக சிறிய மானியங்கள் வழங்குதழுடன் தொழிற்பயிற்ச்சி வழங்குதலையும் அதிகரிக்க வேண்டும்.

### மனநல ஆதரவு

- சுகாதார அமைச்சினால் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் இரு பொது சுகாதார பிரச்சாரங்கள் நடத்தப்பட வேண்டும் : முதலில் மன நல விழிப்புணர்வு அடுத்து மதுபாவனையின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை வளர்த்தல்.
- அரசு அல்லாத நிறுவணங்களின் உதவியுடன், சுகாதார தினைக்களம் நிதி/ தனிப்பட்ட சிரமங்களை எதிர்க்கொள்ளும் நபர்களுக்கு மற்றும்/அல்லது கிராமப்புரங்களில் மதுபாவனைக்கு அடிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்காக மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள் தொகுப்பை உறுவாக்க வேண்டும். இது பயிற்சி அளிக்கப்பட்ட சமூக ஆலோசகர்களை அதிகப்படுத்துவதாகவும் இருக்கலாம்.

## குழுக்களுக்கு குறிப்பிட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள்



### விவசாயிகள்

தங்கள் பாதுகாப்பற்ற வருமானம் மற்றும் அதிக விவசாய செலவுகள் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக இருக்கின்றது என பங்குதாரார்கள் அடையாளம் காட்டினர்.

போதுமான அளவு அறுவடையின்மை, சந்தைக் கோரிக்கைகளை பற்றிய குறைவான புரிதல் மற்றும் அவர்களின் பயிர்களுக்கு குறைந்தபட்ச விலை இல்லாமை ஆகியவை கடன் செலுத்தும் சிக்கல்களுக்கும் அவர்களின் வாழ்வில் அதிகரித்த குடும்ப மோதல்களுக்கு வழி வகுக்கின்றன

உரம் வாங்குவதற்கு மானியங்களை வழங்குவதற்கான தற்போதைய முறை முந்தைய உர உற்பத்திற்கான பொருட்களை வழங்குவது போல் செயல்படவில்லை என பங்குதாரர்கள் கருதினர்

- கமத்தொழில் அமைச்சகம் பயிர்களுக்கு குறைந்தபட்ச சந்தை விலை நிர்ணயிக்க வேண்டும்.
- விவசாயத்திற்காகவும் மற்ற விவசாய நடவடிக்கைகளுக்காகவும் நீர் வழங்குவதற்கான முடிவு விவசாய சமூகத்தின் ஆலோசனையுடன் நடத்த வேண்டும்
- விவசாயத் திணைக்களத்தின் விவசாயிகளுக்கு கல்வித் திட்டங்களை நடத்த வேண்டும், அவர்களுக்கு சந்தை நடைமுறைகளை பூர்த்தி செய்ய வேண்டிய விவசாய நடைமுறைகள் மற்றும் திட்டமிடல் திறன்களை பற்றிய அறிவை மேம்படுத்த வேண்டும்.

### தினசரி கூலி தொழிலாளர்கள்:

தினசரி ஊதியத் தொழிலாளர்கள் பணத்திற்காக உழைக்கும் உழைப்பாளர்களாகவும் உள்ளனர், பொதுவாக குறைந்த அளவிலான கல்வியறிவு உள்ளவரான இந்த தொழிலாளர்கள் உரிமைகளை பாதுகாப்பதில் எந்த தொழிலாளர் சட்டங்களும் அல்லது அமைப்புகளும் கிடையாது. மற்றும் அவர்கள் மாறுபாடும் ஊதிய விகிதங்களுக்கு நீண்ட நேரம் வேலை செய்கின்றனர் (800-1200 Rs ~ 5 USD).

- தொழிலாளர் திணைகலம் பணியளிப்பவர்கள் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும்

### வெளிநாடு சென்றுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்கள்.

பங்குதாராரின் பொதுவான கருத்தானது தாய்மார் வெளிநாடு செல்லுவதை அதர்யபடுத்த வேண்டும் என்பதாகும். இதற்க்கான மிக முக்கிய காரணமானது, இந்த தாய்மார்களின் பிள்ளைகளும் (கணவர்களும்) கடுமயான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாக இருப்பதாகும். பிள்ளைகளின் பொதுநலத்தை பற்றி கவனம் செலுத்தபட வேண்டும், முக்கியமாக இப்பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படகூடிய நிலை தொடர்பாக விசேட கவனம் செலுத்தபட வேண்டும்.

சிரார்கள் இருக்கும் பெண்களின் வெளிநாடு செல்லும் முயற்சிகளை அதர்யப்படுத்தும் சட்டரீதியான கட்டுப்பாடுகள் இருப்பிணும் இப்பெண்களுக்கு அவர்களது வீட்டு தேவைகளை பூர்தி செய்து கொள்வதற்கான நடைமுறைகள் இருக்க வேண்டும் என்பது பல பங்குதாரர்களின் கருத்து.

- வெளிநாட்டில் குடியேற விரும்பும் தாய்மாருக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல் (சுய வேலைவாய்ப்பு).
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சமூகசேவை அதிகாரிகள், வெளிநாட்டில் அத் தாய்மார்களின் பிள்ளைகளின் நல்வாழ்வு பற்றி கவனம் செலுத்த விசேட நடைமுறைகளை நடத்த வேண்டும்.
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இப்பெண்களின் குடும்பங்களுக்கு தமது ஆதரவை மேம்படுத்த வேண்டும். வெளிநாட்டில் இருக்கும்போது வேலை செய்யும் சிரமங்களை எதிர்கொள்ளவும் (குறிப்பாக பணம் செலுத்துவதில்), இப்பெண்களின் குடும்பதினரது அவசரகால வரவு செலவிற்கான திட்டங்களும் (வாழ்க்கை மற்றும் கல்வி செலவுகளுக்காக) வழங்கப்பட வேண்டும்.

### பெண் தலைமையிலான குடும்பங்கள்:

பெண் தலைமையிலான குடும்பங்கள் பொருள் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கியவை என்று பங்குதாரர்கள் ஒப்புக் கொண்டனர். அவர்கள் வீட்டிலும் சமூகத்திலும் வலுவற்ற நிலையில் உள்ளனர். பாரம்பரியமாக, இலங்கை கலாச்சாரத்தில் பெண்கள் தம் பெற்றோர் அல்லது கனவன் கவனிப்பில் இருப்பதால், சுயாதீனமாக நிர்வாகிக்க எதிர்பார்க்கப்படுவதில்லை. சுயாதீனமாக நிர்வாகிப்பதற்கு பெண்களுக்கு தேவையன புரிதல் மற்றும் அடிப்படை திறன்கள் இல்லாமையால், அவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்

- பெண் தலைமையிலான குடும்பங்கலை குரியாக கொண்டு இப்பெண்களை சுயாதீனமாக நிர்வாகிப்பதற்கு ஒரு சிறப்பு ஆதரவு நடைமுறை நடத்தபடவேண்டும்.
- *பெண் தலைமையிலான குடும்பங்களின் படத்தை மேம்படுத்தவும், வன்முறையிலிருந்து பாதுகாக்கவும் தேசிய அளவிலான திட்டம் தேவை.
- நிதி அமைச்சகம் சிறு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தும் நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

---

### கண்டுபிடிப்புகள் சுருக்கம்

.இலங்கையில் கிராமப்புரங்களில், புள்ளிவிபரங்களின் படி தற்கொலை முயற்சிக்கான அதிக ஆபத்தினைக் கொண்ட சனத்தொகையுள் நாம் நான்கு துணைக்குளுக்களை கண்டறிந்தோம்.

1) விவசாயிகள் 2) தினசரி கூலித்தொழிலாளிகள் 3) பெண் தலைமை வகிக்கும் குடும்பங்கள் 4) வெளிநாடு சென்றுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்கள்.

- .இந்த குழுக்களில் அதிக அபாயத்திற்கு பங்களித்த பல காரணிகளை சமூகம் அடையாளம் கண்டதுடன், இவற்றினால் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உருப்பிணர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஏற்கனவே கொடுக்கப்படும் சேவைகளின் மேம்பாடும், சிறந்த சேவைகளும் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது.
- .பயிர்களுக்கு குறைந்த விலை இன்மை, தொழிலாளர்களுக்கு குறைவான தினசரி ஊதியம் மற்றும் பிள்ளைகளுக்கு போதாத நலன்புரி உதவி போன்ற பொருளாதார காரணிகள் பங்குதாரர்களால் முன்வைக்கப்பட்டது.
- . தனிப்பட்ட திறமைகள் மற்றும் முறன்பாடுகளுக்கு தீர்மானம் காணும் திறன்களின் மேம்பாட்டின் அவசியமானது ஓர் உலகளாவிய பிரச்சிணையாக பங்குதாரர்கள் பட்டறைகளிலும் முன்வைக்கப்பட்டது
- பங்குதாரர்கள் சிரமங்களை அனுபவிக்கும் நபர்களுக்கு ஆலோசனை ஆதரவு தேவை என்பதையும் வலியுறுத்தினர்.

<table>
<tr><th></th><th>விவசாயிகள்</th><th>தினசரி கூலி தொழிலாளர்கள்</th><th>பெண் தலைமை வகிக்கும் குடும்பங்கள்</th><th>வெளிநாடு சென்றுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்கள்.</th></tr>
<tr><td rowspan="3">பொருளாதாரம்</td><td colspan="4">வரையருக்கப்பட்ட மற்றும் நிலையற்ற வருமான ஆதாரங்கள்</td></tr>
<tr><td colspan="4">கடன்கள்( பெரிய தொகைகள் மற்றும் வட்டிகள்)</td></tr>
<tr><td colspan="3">வருமானத்தை விட அதிகமான செலவுகள்</td><td>வெளிநாட்டில் இருப்பவர்களின் ஊதியப் பிரச்சினை</td></tr>
<tr><td rowspan="3">சுகாதாரம்</td><td>விவசாயத்திற்கான உள்ளீடுகளை வாங்க முடியாமை(உரங்கள் / பூச்சிக்கொல்லிகள்)</td><td>கடின உழைப்புக்கான குறைந்த ஊதியம்</td><td>பிள்ளைகளின் நலன்புரியினால் பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை</td><td>அனுப்பப்படும் பணம் செலுத்தப்படாமை</td></tr>
<tr><td>பயிர்களுக்கு போதுமான சந்தை விலை இல்லாமை</td><td>தொழிலாளியின் உடல்நலக்குறைவு</td><td>பாலியல் வன்முறைக்கான அதிக ஆபத்து</td><td>அனுப்பப்படும் பணத்தின் பிழையான நிர்வாகம்</td></tr>
<tr><td colspan="4">மதுபாவனை அடிமை (தனிப்பட்ட மற்றும் குடும்ப உறுப்பினர்கள்)</td></tr>
<tr><td rowspan="3">கல்வி</td><td>சந்தை ஏற்றம் இறக்கங்கள் பற்றி குறைவான விளக்கம்.</td><td colspan="2">தொழில் திறமை இன்மை</td><td>வீட்டில் இருக்கும் பராமறிப்பாளருக்கு மன உளச்சல்</td></tr>
<tr><td colspan="4">நிதி நிர்வாகத்திறன் இல்லாமை</td></tr>
<tr><td colspan="4">உறவுகளிடையே பிரச்சினை மற்றும் முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் திறன்கள்(பாலியல் கல்வி)</td></tr>
<tr><td rowspan="3">குடும்பம்</td><td>சிறந்த அருவடைக்கான புதிய நுட்பங்கள் பற்றி குறைந்த விளக்கம்</td><td>குறைவான கல்வித்தகமை என்பதால் குறைவான வேலை வாய்ப்பு</td><td colspan="2">பிள்ளைகள் பராமறித்தலையும் வ்ருமானச் செயற்பாடுகளையும் ஒன்றாக சமாளிப்பது கடினம்</td></tr>
<tr><td colspan="4">குடும்ப பிரச்சினைகள்- பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமை, முக்கியமாக பாலியல் உறவு/ பொருளாதாரம் சம்பந்தப்பட்டது</td></tr>
<tr><td colspan="3">இளம் திருமணங்கள்</td><td>விட்டுச்செல்லப் பட்ட குடும்பம் கைவிடப்பட்டது போலும் தனிமையாகவும் உணர்தல்</td></tr>
<tr><td rowspan="4">சூழல்</td><td rowspan="4">விவசாயத்திற்கு நீர் போதாமை<br>விவசாயத்திற்கு நிலம் போதாமை<br>பயிர் அழிப்பு</td><td rowspan="4"></td><td>எதிர்பாராத கர்ப்பம்</td><td>பிள்ளைகளை மோசமாக நடத்துதல்</td></tr>
<tr><td>பாதுகாப்பின்மை</td><td rowspan="3"></td></tr>
<tr><td>குறைந்த சமூக நிலை</td></tr>
<tr><td>சமூக நெறிமுறைகளை மீறியது காரணமாக ச்மூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படுதல்</td></tr>
</table>

**ஒப்புகை**

'பாதுகாப்பான சேமகம்' திட்டப்பணியில் வேலை செய்த அனைவருக்கும் மற்றும் இதில் பங்குபற்றிய சமூக உருப்பிணருக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். எமது பட்டறைகளில் பங்குபற்றிய பங்குதாரர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, எமது அறிக்கையை செய்வதற்கு உதவிய திரு.சமில் ப்ரியதர்ஷன, டாக்.ஜூடி கிட்கர், பேராசிரியர்.நாவ் கபூர் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

**மேலதிக தகவல்கள்**

*Knipe DW, Metcalfe C, Fernando R, et al. Suicide in Sri Lanka 1975-2012: age, period and cohort analysis of police and hospital data. BMC Public Health 2014;14(1):839 doi: 10.1186/1471-2458-14-839.*

*Knipe DW, Gunnell D, Pieris R, et al. Is socioeconomic position associated with risk of attempted suicide in rural Sri Lanka? A cross-sectional study of 165 000 individuals. BMJ Open 2017;7(3):e014006 doi: 10.1136/bmjopen-2016-014006*

**தொடர்பு கொள்ளல்**

*Dr. துலீகா நைப் - dee.knipe@bristol.ac.uk*

*Ms. ஜிசெல் தாஸ் - giss.dass@gmail.com*